# 7th Social Science Lesson 2 Questions in Tamil - வரலாறு

## 2. டெல்லி சுல்தான்கள்

1) வடஇந்தியாவைக் கொள்ளையடித்த துருக்கியக் குதிரைப்படை வீரர்களின் வெற்றிக்கு காரணம்?

a) மூர்க்கக்குணம்

b) இந்திய அரசர்களின் இயலாமை

c) இந்தியர்கள் தங்களிடையே ஒருவர்மேலொருவர் கொண்டிருந்த அவநம்பிக்கை

d) இவை அனைத்தும்

2) இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி யாரால் நிறுவப்பட்டது?

a) முகமது கோரி

b) அகமதுஷா அப்தாலி

c) நாதிர்ஷா

d) பாபர்

3) பின்வருபவர்களுள் அடிமை வம்ச அரசர்/அரசர்கள்?

a) குத்புதீன் ஐபெக்

b) இல்துமிஷ்

c) கியாசுதீன் பால்பன்

d) இவை அனைத்தும்

4) குத்புதீன் எந்த நகரை தலைநகராகக்கொண்டு ஆட்சியை தொடங்கினார்?

a) டெல்லி

b) கான்பூர்

c) லாகூர்

d) காபூல்

5) கீழை கங்கைச் சமவெளியைக் (பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பை குத்புதீன் ஐபெக் யாரிடம் ஒப்படைத்தார்?

a) இல்துக்மிஷ்

b) ஆரம்ஷா

c) பக்தியார் கில்ஜி

d) கைகுபாத்

6) இந்தியாவிலுள்ள மிகப் பழமையான மசூதி எனக் கருதப்படுவது எது?

a) குவ்வத்–உல்– இஸ்லாம் மஸ்ஜித்

b) முத்து மசூதி

c) மோதி மசூதி

d) இவை அனைத்தும்

7) போலோ விளையாட்டின்போது குதிரையிலிருந்து தவறி விழுந்ததில் படுகாயமடைந்து இறந்த அரசர் யார்?

a) இல்துமிஷ்

b) ஐபெக்

c) ஆரம்ஷா

d) பால்பன்

8) யாருடைய ஆட்சியின்போது மங்கோலியர்கள் செங்கிஸ்கானின் தலைமையில் இந்தியாவின் எல்லைப்பகுதிகளை அச்சுறுத்தினர்?

a) இல்துமிஷ்

b) அலாவுதீன் கில்ஜி

c) ரசியா

d) பால்பன்

9) கூற்று (A): ஏற்கெனவே செங்கிஸ்கானால் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டிருந்த குவாரிஜம் ஷா ஜலாலுதீன் என்பார் இல்துமிஷிடம் அடைக்கலமும் பாதுகாப்பும் கேட்டிருந்தார்.

காரணம் (R): அவருடைய வேண்டுகோளை ஏற்க மறுத்ததன் மூலம் இல்துமிஷ் மங்கோலிய ஆபத்தைத் தவிர்த்தார்.

a) A சரி ஆனால் R தவறு

b) A சரி மற்றும் R சரியான விளக்கம்

c) A தவறு R சரி

d) A சரி ஆனால் R சரியான விளக்கம் அல்ல

10) "சகல்கானி" அல்லது நாற்பதின்மர் குழு யாரால் உருவாக்கப்பட்டது?

a) பால்பன்

b) குத்புதீன் ஐபெக்

c) ஆரம் ஷா

d) இல்துமிஷ்

11) கூற்று (A): இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு 'இக்தாக்களை' (நிலங்கள்) வழங்கினார்.

காரணம் (R): "இக்தா" என்பது ராணுவஅதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும்.

a) A சரி ஆனால் R தவறு

b) A சரி மற்றும் R சரியான விளக்கம்

c) A தவறு R சரி

d) A சரி ஆனால் R சரியான விளக்கம் அல்ல

12) குதுப்மினாரின் கட்டுமானப் பணிகளை தொடங்கியவர் யார்?

a) பால்பன்

b) குத்புதீன் ஐபெக்

c) ஆரம் ஷா

d) இல்துமிஷ்

13) இல்துமிஷ்ஷின் திறமை வாய்ந்த மகன் யார்?

a) பால்பன்

b) ருக்குதீன் பிரோஷ்

c) ஆரம் ஷா

d) குஸ்ரு

14) ரஸ்ஸியா தனது தனி உதவியாளராக நியமித்த ஜலாலுதீன் யாகுத் எந்த நாட்டை சேர்ந்தவர்?

a) எத்தியோப்பியா

b) ஆப்பிரிக்கா

c) அயர்லாந்து

d) துருக்கி

15) "நாற்பதின்மர்" என்றறியப்பட்ட துருக்கியப் பிரபுக்கள் குழுவை ஒழித்தவர் யார்?

a) பால்பன்

b) ருக்குதீன் பிரோஷ்

c) ஆரம் ஷா

d) குஸ்ரு

16) பால்பனுக்கு எதிராகக் கலகம் செய்த வங்காள மாகாண ஆளுநர்?

a) துக்ரில்கான்

b) குஸ்ரு

c) மியோக்கள்

d) குலகுகான்

17) "மங்கோலியர்கள் சட்லஜ் நதியைக் கடந்து படையெடுத்து வரமாட்டார்கள்" எனும் உறுதிமொழியைப் பால்பன் யாரிடமிருந்து பெற்றார்?

a) துக்ரில்கான்

b) குஸ்ரு

c) மியோக்கள்

d) குலகுகான்

18) பால்பன் ஆதரித்த பாரசீகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர்?

a) தான்சேன்

b) அமீர் குஸ்ரு

c) இஸ்தாத் உஷா

d) கபீர்

19) ஜலாலுதீனின் ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகளுக்கு தலைமை தாங்கியவர் யார்?

a) மாலிக்கபூர்

b) பக்தியார் கில்ஜி

c) அலாவுதீன் கில்ஜி

d) கைகுபாத்

20) தேவகிரி யாதவ அரசர் ராமச்சந்திரனைத் தோற்கடித்த டெல்லி சுல்தான்?

டெல்லி சுல்தான்?

a) பிரோஸ் துக்ளக்

b) ஜலாலுதீன் கில்ஜி

c) அலாவுதீன் கில்ஜி

d) பால்பன்

21) மாலிக்காபூர் தென்பகுதியை நோக்கி படையெடுக்க தொடங்கிய ஆண்டு?

a) 1310

b) 1320

c) 1316

d) 1312

22) தவறான இணையை தேர்ந்தெடு.

a) தேவகிரி – யாதவர்கள்

b) துவாரசமுத்திரம் – ஹொய்சாளர்கள்

c) வாரங்கல் – பரமாரர்கள்

d) மதுரை – பாண்டியர்கள்

23) சித்தூர் சூறையாடல் எந்த ஆண்டு நடைபெற்றது?

a) 1303

b) 1320

c) 1316

d) 1312

24) அலாவுதீன் கில்ஜி வரிகளை வசூல் செய்யும் பணியை யாரிடம் ஒப்படைத்தார்?

a) ஜமீன்தார்கள்

b) உள்ளூர் தலைவர்கள்

c) குறுநில மன்னர்கள்

d) ராணுவ அதிகாரிகள்

25) கட்டாய உணவு தானியக் கொள்முதல் முறையை அறிமுகம் செய்தவர் யார்?

a) ஜலாலுதீன் கில்ஜி

b) அலாவுதீன் கில்ஜி

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

26) துக்ளக் அரசவம்ச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டியவர் யார்?

a) கியாசுதீன் துக்ளக்

b) ருக்குத்தீன் பிரோஸ்

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

27) ஜானாகான் எனும் இயற்பெயர் கொண்டவர்?

a) கியாசுதீன் துக்ளக்

b) ருக்குத்தீன் பிரோஸ்

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

28) தேவகிரியின் பெயரை தௌலதாபாத் என மாற்றியவர் யார்?

a) கியாசுதீன் துக்ளக்

b) ருக்குத்தீன் பிரோஸ்

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

29) முகமது பின் துக்ளக் உடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப் பயணி யார்?

a) இபன் பதூதா

b) மெகஸ்தனிஸ்

c) அல்மசூதி

d) இவர்கள் அனைவரும்

30) அலாவுதீன் நிலவரியைத் தானியமாக வசூல் செய்யும் முறையைப் பின்பற்றியவர் யார்?

a) கியாசுதீன் துக்ளக்

b) ருக்குத்தீன் பிரோஸ்

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

31) முகமது பின் துக்ளக் நிலவரியை உயர்த்தியதன் விளைவாக விவசாயிகளின் கிளர்ச்சிகள் எங்கு நடைபெற்றது?

a) கங்கை சமவெளி

b) தோ ஆப் பகுதி

c) ஆக்ரா

d) பஞ்சாப்

32) முகமது பின் துக்ளக் கு எதிராக எதிராகக் கிளர்ச்சி செய்து தங்களைச் சுதந்திர அரசர்களாகப் பிரகடனம் செய்து கொண்ட மாகாண ஆளுநர்கள் யார்?

a) முல்தான்

b) சிந்து

c) அவுத்

d) இவை அனைத்தும்

33) தக்காணப் பிரச்சனைகளில் தலையிட வேண்டும் எனக் கேட்டு பிரோஸ் துக்ளக்கிற்கு அழைப்பு விடுத்தவர் யார்?

a) பாமினி இளவரசர்

b) ராமராயர்

c) நரசிம்மர்

d) முல்தான் ஆளுநர்

34) ஏழை முஸ்லீம்களுக்கு உதவுவதற்கான அறக்கட்டளைகளை நிறுவியவர் யார்?

a) கியாசுதீன் துக்ளக்

b) ருக்குத்தீன் பிரோஸ்

c) பிரோஸ் துக்ளக்

d) முகமது பின் துக்ளக்

35) பிரோஸ் துக்ளக் நிர்மாணித்த நகரங்கள் எது/எவை?

a) பிரோசாபாத்

b) ஜான்பூர்

c) ஹிஸார்

d) இவை அனைத்தும்

36) பிரோஷா துக்ளக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர் யார்?

a) கிசர்கான்

b) சுசர்கான்

c) முகமது கான்

d) குஸ்ரு



winmeen.com

37) தாமர்லைன் என்றழைக்கப்பட்ட தைமூர் இந்தியாவை எந்த ஆண்டு கொள்ளை அடித்தார்?

a) 1398

b) 1289

c) 1298

d) 1256

38) தைமூர் தான் கைப்பற்றிய பகுதிகளுக்கு யாரை ஆளுநராக நியமித்தார்?

a) கிசர்கான்

b) சுசர்கான்

c) முகமது கான்

d) குஸ்ரு

39) சையது வம்சத்தின் கடைசி அரசர் யார்?

a) அகமதுஷா

b) பாமன்ஷா

c) அலாவுதீன் ஆலம் ஷா

d) முகமது ஷா

40) 1489இல் பகலூல் லோடியைத் தொடர்ந்து சுல்தானாக ஆட்சிப்பொறுப்பேற்றவர்?

a) சிக்கந்தர்லோடி

b) இப்ராஹிம் லோடி

c) அலாவுதீன் ஆலம் ஷா

d) முகமது ஷா

41) பின்வருவனவற்றுள் இந்தோ – சாராசானிக் கலைவடிவத்தில் கட்டப்பட்டவை எது/எவை?

a) அலெய் தர்வாசா

b) குவ்வத் உல் இஸ்லாம் மசூதி

c) மோத்தி மசூதி

d) இவை அனைத்தும்

winmeen.com